க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2016

பொருளியல் I

விடையளித்தலுக்கான வழிகாட்டல்

வினா இலக்கம்	விடை	வினா இலக்கம்	விடை
(1)	4	(26)	5
(2)	3	(27)	4
(3)	1	(28)	5
(4)	4	(29)	2
(5)	4	(30)	3
(6)	1	(31)	5
(7)	3	(32)	3
(8)	1	(33)	4
(9)	2	(34)	4
(10)	2	(35)	1
(11)	4	(36)	4
(12)	1	(37)	5
(13)	4	(38)	3
(14)	4	(39)	4
(15)	1	(40)	4
(16)	4	(41)	3
(17)	3	(42)	3
(18)	2	(43)	1
(19)	3	(44)	4
(20)	2	(45)	3
(21)	4	(46)	2
(22)	2	(47)	4
(23)	3	(48)	1
(24)	1	(49)	2
(25)	1	(50)	5

(02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்)

PAPERMASTER.LK

1, (i) ★ மீளமைக்கக் கூடிய வளங்கள்- உற்பத்தித் தொழிற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் போது முடிவடைந்தாலும் மீண்டும் உருவாகும் வளம்.
உ-ம் : காடு, மீன் வளம்

★ மீளமைக்க முடியாத வளங்கள் - உற்பத்தித் தொழிற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் போது முடிவடைந்தாலும் மீண்டும் உருவாக்க முடியாத வளம்.
உ-ம் கனிய வளம் (04 புள்ளிகள்)

(ii)



★ பொருளாதாரப் பின்னடைவு என்பது ஒரு பொருளாதாரத்தின் இரண்டு காலாண்டுகள் போன்ற குறுகிய காலத்தினுள் மெய்த்தேசிய வெளியீடு வீழ்ச்சியடைதல். இங்கு வேலைவாய்ப்பு குறைவடையும். பொருளாதாரத்தின் உண்மையான வெளியீடு குறையும். உண்மையான உற்பத்தி சாத்திய எல்லைப் புள்ளி மேலும் இடதுபுறம் நகரும்.

★ பொருளாதார ஒன்றில் பொருளாதா வீழ்ச்சி என்பது தேறிய தேசிய வெளியீட்டில் நீண்ட காலத்தில் நடைபெறும் வீழ்ச்சியாகும். தீவிரத்தன்மை கூடும். பொருளாதாரத்தில் உத்தம வெளியீட்டு மட்டம் பின்னடையும் நிலை ஏற்படுவதால் மொத்தக் கேள்வி மட்டுமன்றி மொத்த நிரம்பலும் வீழ்ச்சியடையும். இங்கு உற்பத்தி சாத்திய எல்லை வளையி இடதுபுறமாக நகரும்.

(ஏதாவது இரு காரணகளுக்கு 02 புள்ளிகள்)

(iii) (அ) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான கருவிகள்
- சந்தைப் பொருளாதார முறைமை
- கட்டளையிடல் (மத்திய திட்டமிடல்) பொருளாதார முறைமை
- பாரம்பரிய பொருளாதார முறைமை (02 புள்ளிகள்)

(ஆ) வள உரிமை
- முதலாளித்துவப் பொருளாதார முறைமை
- சமவுடமைப் பொருளாதார முறைமை (01 புள்ளி)

(இ) ஊக்குவிப்பு முறை
- சந்தைப் பொருயாதார முறைமை
- கட்டளை (மத்தியதிட்டமில்) பொருளாதார முறைமை
- பாரம்பரிய பொருளாதார முறைமை (01 புள்ளி)

PAPERMASTER.LK

(iv) ★ சமிக்ஞை வழங்கல் - நுகர்வோர், உற்பத்தியாளர் மற்றும காரணி உரிமையாளர்களுக்கு தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களை வழங்கல்

★ ஊக்குவிப்பு வழங்கல் - தீர்மானம் மேற்கொள்ளும் குழுக்களை ஊக்குவிப்பதற்கு

★ பங்கீடு - பற்றாக்குறையான வளங்களை மாற்றுக் குறிக்கோள்களுக்கேற்ப பங்கிடல்

(மூன்று காரணிகளுக்கும் மட்டும் 2 புள்ளிகள்

(மொத்தம் 4 புள்ளிகள்)

(v) சமூக சந்தைப் பொருளாதாரத் முறைமை என்பது பொருளாதாரத்துடன் சமூக நியாயத்துவமும் தனியார் சுதந்திரமும் இணைந்து செயற்படும் பொருளாதாரமாகும். இங்கு சமூக நலம் மிக முக்கியத்துவம் பெறும். குறைந்த வருமான மட்டத்தை உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்வதற்கும் சமூகத்தில் உள்ள அனைவரையும் பொருளாதாரக் கஷ்டங்களில் இருந்தும் ஆபத்திலிருந்தும் காப்பதும் இதன் குறிக்கோளாகும்.

உ-ம் ஜேர்மன் உட்பட ஸ்கண்டினேவிய நாடுகள்

(விளக்கங்களுக்கு 2 புள்ளிகள், உதாரணத்திற்கு 1 புள்ளி)

(மொத்தம் 4 புள்ளிகள்)

2, (i) பண்டங்களுக்கு அல்லது சேவைகளுக்கான தேவை காணப்படல்.

கொள்வனவு செய்யக்கூடிய ஆற்றல் (கொள்வனவு சக்தி) காணப்படல்.

கொள்வனவு செய்யக்கூடிய திட்டம் காணப்படல்.

(ஒரு காரணிக்கு 1 புள்ளி வீதம் 1 புள்ளி)

(ii) (அ) 1. உள்ளீடுகளின் விலை
2. இணைப்பபுப் பண்டங்களின் விலை
3. தொழில் நுட்பம்
4. அரச கொள்கை (வரி. மானியம்)
5. உற்பத்தியாளர் எதிர்பார்ப்பு
6. உற்பத்தியாளர் தொகை

(ஒரு காரணிக்கு 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)

(ஆ) 1. கூடிச் செல்லும் அமையச் செலவு விதி (உற்பத்தியுடன் எல்லைச் செலவு அதிகரித்தல்)
2. விலைமாற்றத்துடன் இலாபத்தன்மை மாற்றமடைதல்.

(ஒரு காரணிக்கு 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)

(iii) குறைந்தபட்ச விலையை நிர்ணயித்து விலை உதவு தொகை செயற்திட்டத்தை அமுல்படுத்தல்

உத்தரவாத விலையைப் பெற்றுத் தருவதாக இணங்கி குறைநிரப்புக் கொடுப்பனவு வழங்கல்.

(ஒரு காரணிக்கு 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)

குறைநிரப்புக் கொடுப்பனவின் பொருளாதார விளைவுகள்

1. உற்பத்தி மிகை அதிகரித்தல்.
2. நுகர்வு மிகை அதிகரித்தல்.
3. இழக்கப்படும் சமூக நல நிலைமை ஒன்று ஏற்படல்.
4. அரசுக்கு செலவு ஏற்க வேண்டி ஏற்படும்.
5. மொத்தச் செலவில் மாற்றம் ஏற்படும் / நுகர்வோர் சுவையில் மாற்றம் ஏற்படும்.
6. நுகர்வோர் வழங்கும் விலை வீழ்ச்சியடையும்.
7. உற்பத்தியாளருக்கு கிடைக்கும் விலை அதிகரிக்கும்

PAPERMASTER.LK

விலை உதவு தொகை திட்டத்தின் பொருளாதார விளைவுகள்

1. உற்பத்தி மிகை அதிகரிக்கும்
2. நுகர்வோர் மிகை குறையும்
3. நுகர்வோர் வழங்கும் மிகை அதிகரிக்கும்./ உற்பத்தியாளருக்கு கிடைக்கும் விலை அதிகரிக்கும்
4. குறை நிரப்புக் கொடுப்பனவுத் திட்டத்தை விட இழக்கும் சமூகநல நிலைமை உயர் பெறுமதியைப் பெறும்.

(ஏதாவது மூன்று விளைவுகளுக்கு 3 புள்ளிகள்)

(iv)



நுகர்வோர் மிகை $= \frac{(P_1 - 50)\,800}{2}$

$32\,000 = (P_1 - 50)\,400$

$32\,000 = 400\,P_1 - 20\,000$

$\frac{52\,000}{400} = \frac{400\,P_1}{400}$

$P_1 = 130$

உற்பத்தியாளர் மிகை $= \frac{(50 - P_2)\,800}{2}$

$16\,000 = (50 - P_2)\,400$

$16\,000 = 20\,000 - 400\,P_2$

$\frac{400\,P_2}{400} = \frac{4\,000}{400}$

$P_2 = 10$

(வரை படத்திற்கு 04 புள்ளிகள்)

(அ) ● நுகர்வோர் மிகை : $(130 - 58) \times 720/2$

$= 72 \times 360 = \underline{25\,920}$ (01 புள்ளி)

● உற்பத்தியாளர் மிகை : $(46 - 10) \times 720/2$

$= 36 \times 360 = \underline{12960}$ (01 புள்ளி)

(ஆ) ● அரச வரி வருமானம் = வரி × விற்பனைத் தொகை

$= 12 \times 720 = \underline{8\,640}$ (01 புள்ளி)

(இ) ● மிகை வரிச்சுமை = வரி × சமநிலைத் தொகையின் மாற்றம் /2

$= 12 \times (800 - 720)/2$

$= 12 \times 80\ /2$

$= \underline{480}$ (01 புள்ளி)

PAPERMASTER.LK

3, (i) உற்பத்தித் தொழிற்பாட்டில் குறைந்தபட்சம் ஓர் உள்ளீடாவது நிலையாகக் காணப்படும் காலம் குறுங்காலமாகும். அதன்படி குறுங் காலம் எனக் கவனத்தில் எடுக்கும் காலப்பகுதியில் நிலையான உள்ளீடுகள், மாறும் உள்ளீடுகள் என உள்ளீடுகள் இரு வகையாகக் காண்படுவதுடன், வெளியீட்டில் ஏற்படும் மாற்றத்துடன் நிலையான உள்ளீடு மாறாமல் காணப்படும்.

நிறுவனமொன்றில் உற்பத்திச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தும் எல்லா வெளியீடுகளையும் மாற்றுவதற்குப் போதுமான கால அளவு நீண்ட காலமாகும்.

நீண்ட காலம் எனக் கவனத்திற் கொள்ளப்படும் காலப்பகுதியில் நிலையான, மாறும் வெளியீடு என வகைப்படுத்தப்படாது. எல்லா வெளியீடுகளும் மாறும் வெளியீடுகளாகக் காணப்படும் (02 புள்ளிகள்)

(ii) நிறுவனத்தின் மொத்த வருமானத்தில் இருந்து நிதிச் செலவு அல்லது நேர்ச் செலவைக் கழித்த பின் வரும் மீதி கணக்கியல் இலாபம் எனப்படும். (01 புள்ளி)

வியாபார நிறுவனத்தினது மொத்த வருமானத்திலிருந்து உற்பத்தித் தொழிற்பாட்டில் மொத்த அமயச் செலவையும் கழித்தபின் வரும் மீதி பொருளியல் இலாபம் எனப்படும். உற்பத்தியில் அமயச் செலவில் நேர் செலவு மற்றும் உள்ளார்ந்த செலவு என இரண்டும் உள்ளடக்கப்படும். (01 புள்ளி)

உள்ளார்ந்த செலவு காணப்படும் போது கணக்கீட்டு இலாபத்தை விட பொருளியல் இலாபம் குறைந்த பெறுமதியைப் பெறும். (01 புள்ளி)

உதாரணம் :

நிறுவனத்தின் மொத்த வருவாய்	= ரூ. 750 000
வெளியில் இருந்து கொள்வனவு செய்த உள்ளீடுகள் (நேர்செலவு)	= ரூ. 300 000
கணக்கியல் இலாபம்	= ரூ. 450 000
உள்ளார்ந்த செலவு (இழந்த வட்டி + இழந்த சம்பளம் + சாதாரண இலாபம் + பொருளாதாரத் தேய்வு)	= ரூ. 200 000
பொருளாதார இலாபம்	= ரூ. 250 000 (01 புள்ளி)

(iii) ஒத்த தன்மைகள்

1. நிறைபோட்டியினதும் தனியுரிமை போட்டியினதும் நிறுவனங்களின் தொகை அதிகளவு காண்ப்படுதல்.
2. நிறைபோட்டியிலும் தனியுரிமை போட்டியிலும் உட் பிரவேசிக்கவும் வெளியேறவும் பிரவேசத்தடை காணப்பட மாட்டாது.
3. நிறைபோட்டியிலும் தனியுரிமை போட்டியிலும் நீண்ட காலத்தில் சாதாரண இலாபத்தை மட்டும் உழைக்க முடியும். (02 புள்ளிகள்)

வேறுபாடுகள்

1. நிறைபோட்டியில் ஓரினத்தன்மை வாய்ந்த பண்டங்கள் காணப்படல், தனியுரிமைப் போட்டியில் பொருட் பேதப்படுத்தல் காணப்படல்.
2. நிறைபோட்டியில் தகவல்கள் பூரணமாகவும் செலவின்றியும் பெற முடியும். தனியுரிமைப் போட்டியில் தகவல்களை பூரணமாகவும் செலவின்றியும் பெற முடியாது,
3. நிறைபோட்டி நிறுவனம் விலையை ஏற்போன். ஆனால் தனியுரிமைப் போட்டி நிறுவனம் விலையைத் தீர்மானிப்போனும் ஆகும்.
4. நிறைபோட்டி நிறுவனத்தில் கேள்விக்கோடு பூரண கேள்வி நெகிழ்ச்சிக் கோடாகவும் தனியுரிமை போட்டி நிறுவனத்தில் கேள்விக் கோடு இடமிருந்து வலமாகச் செல்லும் சாதாரண கேள்விக் கோடாகவும் காணப்படும். (02 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(iv) குறிப்பிட்ட ஒரு தொழிலுக்கு அல்லது உற்பத்திக்கு பிரவேசிக்கக் காணப்படும் இயற்கையான அல்லது சட்டரீதியான தடைகள் பிரவேசத் தடைகள் எனப்படும். குறிப்பிட்ட ஒரு சந்தைக்கு பிரவேசிப்பதற்குக் காணப்படும் பிரதான தடைகளாவன.

- முக்கிய மூலப் பொருட்களும் தொழிநுட்ப அறிவும் பற்றிய உரிமை ஒரு நிறுவனத்திற்கு மட்டும் காணப்படும்.
- அரச சட்டரீதியான தடை (அரச உத்தரவுப் பத்திரம், சுய அதிகார உரிமை போன்ற தடைகள்)
- அளவுத்திட்ட சிக்கனம் ஒரு நிறுவனத்துக்கு கிடைப்பதால் புதிய நிறுவனங்களுக்கு தொழிலில் உட்பிரவேசிக்க தடை ஏற்படல். (04 புள்ளிகள்)

(v) (அ) ரூ. 40 ஐ விடக் கூட வேண்டும் P = 40 ஆனால் சாதாரண இலாபம் மட்டுமே உழைக்கலாம்.

(01 புள்ளி)

(ஆ) மொத்த நிலையான செலவு = சராசரி செலவு × வெளியீட்டுச் செலவு

$TFC = AFC \times Q$

$TFC = (ATC - AVC) \times Q$

$TFC = (60 - 40) \times 400$

$TFC = 20 \times 400$

TFC = ரூ. 8000 (02 புள்ளிகள்)

(இ) உற்பத்தியிலிருந்து வெளியேற தீர்மானிப்பது பண்ட அலகு ரூ.20 ஐ விடக் குறைந்தாலாகும். தொழிலில் தொடர்ந்து தங்குவதற்கு விலையானது குறைந்தபட்ச சராசரி மாறும் செலவுக்கு சமமாக வேண்டும்.

(01 புள்ளி)

4, (i) (அ) தேறிய உள்நாட்டு வருமானம் = மொத்தத் தேசிய வருமானம் (ச.வி) - (தேறிய நேரில் வரி + மூலதனத் தேய்வு)

= 6000 - (100 + 600)

= 5300 (02 புள்ளிகள்)

(ஆ) மொத்தத் தேசிய செலவு = மொத்தத் தேசிய வருமானம் (ச.வி) - தேறிய ஏற்றுமதி

= 6000 - (-400)

= 6400 (02 புள்ளிகள்)

(இ) மொத்த நுகர்வு = மொத்தத் தேசிய செலவு - மொத்த நுகர்வு

= 6400 - 3000

= 3400 (02 புள்ளிகள்)

(ஈ) தேசிய சேமிப்பு = செலவிடத்தக்க தேசிய வருமானம் - மொத்த நுகர்வு

= 6000 + (-200 + 300) - 3000

= 6000 + 100 - 3000

= 3100 (02 புள்ளிகள்)

(ii)
1. பொருளாதாரமொன்றினுள் நடைபெறும் எல்லாப் பயனுள்ள தொழிற்பாடுகளும் தேசிய கணக்கீட்டினுள் உள்ளடக்கப்படாமை. (குடும்பப் பெண்கள் சேவை, சில சுய பொருளாதார நடவடிக்கைகள்)
2. முறைசாரா பொருளாதார நடவடிக்கைகள் (சரியாக அறிக்கைப்படத்தப்படாதவை) சீராக உள்ளடக்கப்படாமை.
3. ஓய்வாக இருத்தல் போன்ற நுகர்வுகள் தேசிய உற்பத்தியில் உள்ளடக்கப்படாமை.
4. உற்பத்தித் தொழிற்பாட்டின்போது சூழல் வளங்களுக்கு ஏற்படும் தேய்வுகளும் சூழல் மாசடைதலும் கவனத்தில் கொள்ளப்படாமை.
5. அரச கடனுக்குச் செலுத்தும் மொத்த வட்டி பயனுள்ள வருமானமாகக் கவனத்தில் எடுக்காமை.

(03 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(iii)



(02 புள்ளிகள்)

வெளியீட்டுச் சுற்றோட்டம் மூலம் வரமானம் சுற்றோட்டமும் வருமானச் சுற்றோட்டம் மூலம் செலவுச் சுற்றோட்டமும் நடைபெறும். வெளியீட்டுச் சுற்றோட்டத்தில் பெறுமதி வருமானம் சுற்றோட்டத்தின் பெறுமதிக்கும் வருமானச் சுற்றோடத்தின் பெறுமதி செலவுச் சுற்றோட்டத்தின் பெறுமதிக்கும் செலவுச் சுற்றோட்டத்தின் பெறுமதி வெளியீட்டுச் சுற்றோட்டத்திற்கும் ஒன்றுக்கொன்று சமமானதாகும். (02 புள்ளிகள்)

(iv) அரசின் சகல செலவுகளும் தேசிய கணக்கினுள் அடங்காது. அதாவது அரச மாற்றல் செலவும் அரச கடனுக்கான வட்டியும் தேசிய கணக்கில் உள்ளடக்கப்படுவதில்லை. (02 புள்ளிகள்)

(v)
- பணவீக்கத் தாக்கமொன்று இன்றி பொருளாதாரமொன்றினால் உற்பத்தி செய்யக்கூடிய உச்ச நிலையான வெளியீட்டு மட்டம் உத்தம வெளியீடு அல்லது உத்தம மொத்த உள்நாட்டு உற்பத்தி எனக் கருதலாம். உத்தம வெளியீடு உச்ச வெளியீட்டு மட்டமாகாது என்பதுடன் நிலையானதாக கொண்டு செல்லக்கூடிய உச்ச வெளியீட்டு மட்டமாகும்.
- வெளியீட்டு இடைவெளி என்பது உண்மையான வெளியீட்டுக்கும் உத்தம வெளியீட்டுக்கும் இடையிலான வேறுபாடாகும். அது இரு வகைப்படும்.
  - ★ மறை வெளியீட்டு இடைவெளி (எதிர்மறையான இடைவெளி) = உண்மை வெளியீடு < உத்தம வெளியீடு
  - ★ நேர்கணியமான வெளியீட்டு இடைவெளி (நேர் வெளியீடு) = உண்மை வெளியீடு > உத்தம வெளியீடு (03 புள்ளிகள்)

5. (i)
- ★ குடும்பங்களிடம் காணப்படும் செல்வம் (வள இருப்பு)
- ★ குடித்தனங்களின் எதிர்பார்ப்பு
- ★ குடித்தனங்களால் பெறப்படும் கடன்
- ★ விலை மட்டம் / எதிர்பார்க்கும் பணவீக்கம் (ஏதாவது இரு காரணிகளுக்கு 02 புள்ளிகள்)

(ii) $Y = E$

$Y = C + I + G + (X - M)$

$W = J$

$S + T + M = I + G + X$

($Y = E$ யும் $W = J$ என்றும் மட்டும் காட்டியிருந்தால் புள்ளி வழங்கப்பட மாட்டாது.)

(02 புள்ளிகள்

குறிப்பிட்டதொரு பொருளாதாரத்தில் சேமிப்பு, வரி, இறக்குமதி என்பன வெளிப்பாய்ச்சல்களாகும். வருமானச் சுற்றோட்டத்தில் இருந்து செலவுச் சுற்றோட்டத்தில் சேராது விலகிச் செல்வதால் அது வெளிப்பாய்ச்சல்களாக கருதப்படுகின்றது. இதனால் மொத்தக் கேள்வி குறையும் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்யும்.

PAPERMASTER.LK

(பெயரிட 01 புள்ளி விளக்கத்திற்கு 01 புள்ளி)

(iii) (அ) $S = -1000 + 0.2\ yd$

$C = 1000 + 0.8\ yd$

$C = 1000 + 0.8\ (y - T)$

$C = 1000 + 0.8\ (y - 100)$

$C = 1000 + 0.8y - 80$

$C = 920 + 0.8y$ (01 புள்ளி)

$C = 920 + 0.8 \times 5000$

$C = 4920$ மி. ரூ. (01 புள்ளி)

(ஆ) $Y = C + I + G$

$Y = 920 + 0.8y + 200 + 80$

$Y = 1200 + 0.8y$

$Y - 0.8y = 1200$

$Y = 1200 / 0.2$

$Y = 6000$ மி. ரூ. (02 புள்ளிகள்)

(இ) $APC = c / y$

$APC = 5720 / 6000$

$APC = 0.95$

(01 புள்ளி)

$APS = S / y$

$= 180 / 6000$

$= 0.03$ (01 புள்ளி)

$S = -1000 + 0.2yd$

$= -1000 + 0.2\ (y-t)$

$= -1000 + 0.2(y-100)$

$= -1000 + 0.2y - 20$

$= \underline{-1020 + 0.2y}$

$S = -1020 + 0.2(6000)$

$= -1020 + 1200$

$= 180$

(ஈ) $K = 1 / 1 - b$

$K = 1 / 1 - 0.8$

$K = 1 / 0.2$

$K = 5$ (02 புள்ளிகள்)

$\Delta Y = \Delta Y \times K$

$100 = 20 \times 5$

சமநிலைத் தேசிய வருமானம் = $6000 + 100 = 6100$ மி. ரூ (02 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(iv)



(வரிப்படத்திற்கு 02 புள்ளிகள்)

பொருளாதாரத்தில் உத்தம வெளியீட்டு மட்டம் yf ஆகும். வெளியீட்டை நிலையாக மேற்கொள்ளத் தேவையான மொத்தக் கேள்வி E_F ஆகும். ஆனால் பொருளாதாரத்தில் உண்மையான மொத்தக் கேள்வி E_1 ஆகையால், பொருளாதாரத்தில் உத்தம வெளியீட்டு மட்டம் கீழ் Y1 வெளியீட்டு மட்டத்தில் சமநிலை அடையும். அதன்படி (Y_1-Y_F) எதிர்கணிய இடைவெளி ஏற்படும் Y1 வெளியீட்டு மட்டம் உற்பத்திச் சாத்திய எல்லையின் இடது பக்கத்தில் காணப்படும் வெளியீட்டு மட்டமாகும்.

(விளக்கத்துக்கு 02 புள்ளிகள்)

6. (i)
- பணம் பூரண திரவத்தன்மையுள்ள சொத்தாகும். அதாவது மாற்றூடகமாக பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் ஊடகமாகும்.
- பணப்பதிலீடு என்பது தற்காலிக பரிமாற்றல் ஊடகமாக பயன்படுத்தக் கூடிய ஆனால் பெறுமதித் திரட்டாக தொழிற்படாத சொத்தாகும்.

  உ-ம் : கடன் அட்டை, செலவு அட்டை
- அண்மிய பணம் என்பது பரிமாற்றூகமாகச் செயற்படாது. எனினும் பெறுமானத் திரட்டாக தொழிற்படும் சொத்தாகும்.

  உ-ம் : சேமிப்பும் தவணை வைப்புக்களும், செலாவணி உண்டியல். பொறுப்பளிக்கப்பட்ட தாள்நாணயம்.
- கறுப்புப் பணம் என்பது உழைத்த முறையை வெளிக்காட்ட முடியதா பணமாகும். இவை பணச் சுற்றோட்டத்திலிருந்து நீங்கி செயலிழந்த பண மீதியாகக் காணப்படும்.

(01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(ii)



(வரிப்படம் கட்டாயமில்லை)

உத்தேச நோக்க பணத்திற்கு ஏற்படும் கேள்வியின் கீழ் பணத்திற்கு நடைமுறையில் உள்ள கேள்வி வட்டி வீதத்தின் மறைச்சார்பாகும். இதனால் பணத்தின் கேள்வி வளையி இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சரியும் (01 புள்ளி)

PAPERMASTER.LK

- வட்டி வீதத்திற்கும் உத்தேச நோக்கத்திற்கும் இடையே எதிர்கணிய தொடர்பு காணப்படுவது

- வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றத்தற்கு ஏற்ப பணத்தைக் கையில் வைத்திருப்பதற்கான அமயச் செலவு மாற்றமடையும்.
- வட்டி வீதம் மாற்றமடையும்போது எதிர்பார்க்கையில் ஏற்படும் செல்வாக்கு காரணமாக பிணைப்பத்திரங்கள் கொள்வனவும் விற்பனையும் நடைபெறுவதால் ஆகும்.

சரியும் (ஏதாவது ஒரு காரணிக்கு 01 புள்ளி)

(iii) (அ) $M_1 = 500 + 1700 = 2200$ (01 புள்ளி)

$M_2 = 2200 + 600 = 2800$ (01 புள்ளி))

$M_{2b} = 2800 + 200 + 500 = 3500$ (01 புள்ளி))

(ஆ) தள நாணயம் = 500 + 300 + 200 = 1000

விரிந்த பண நிரம்பலின் குணகம். = 2800 / 1000 = 2.8 (01 புள்ளி)

(iv) (அ) வணிக வங்கி மிகை ஒதுக்கைப பேணிச் செல்லல்.

வங்கி முறைக்கு வெளியே பணம் சுழலல்

- பொதுமக்களின் கடனுக்கான கேள்வி
- மத்திய வங்கியின் சட்டதிட்டங்கள்

(ஏதாவது இரு காரணகளுக்கு 2 புள்ளிகள்)

(ஆ)

	தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்	கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
• அடியாண்டு	2013 = 100	2006/07 = 100
• புவியியல் பரப்பு	இலங்கையின் எல்லா மாகாணங்களுக்கும்	கொழும்பு மாவட்த்தில் உள்ள எல்லா நகரங்களிலும் உளள குடும்பங்கள்
• இலக்காகக் கொள்ளப்பட்ட குடும்ப அலகுகள்	ஒவ்வொரு மாவட்த்தில் உள்ள எல்லாக் குடும்பங்களும்.	கொழும்பு மாவட்த்தில் உள்ள எல்லா நகரங்களிலும் உளள குடும்பங்கள்
• பண்டத் தொகை	407	373
• நிறையிடல்	(மதுபானம், போதைப்பொருள், சிகரட் உள்ளடக்கப்படும்.)	(மதுபானம், போதைப்பொருள், சிகரட் உள்ளடக்கப்படமாட்டாது.)
- உணவு	44.04%	41.03%
- உணவல்லாதவை	55.96%	58.97%
• விலை சேகரிக்கும் மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	எல்லா மாவட்டங்களிலும் 3 நிலையங்கள்.	கொழும்பு மாநகர் பிரதேசத்தில் உள்ள 14 மத்திய நிலையங்கள்.

(04 புள்ளிகள்)

(v) மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணுக்குப் பதிலாக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விலைச்சுட்டி உற்பத்தியாளர்களின் விலைச் சுட்டெண் ஆகும்.

இதன் முக்கியத்துவம்

சந்தை விலைமட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் இதன்மூலம் காட்ட முடிவதுடன் ஆத்துடன் இதன்போக்கைப் பயன்படுத்தி சரியான சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் ஏற்படும்.

இச்சுட்டெண் விளைதிறன் பகுப்பாய்வுக்கு மட்டுமன்றி ஒப்பந்தங்களின் போது பெறுமதியைத் தீர்மானிக்கவும் வியாபாரத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யவும் நிலையான சொத்துக்களுக்கு தற்போது நிலவும் விலைகளைக் கணிப்பிடவும் பயன்படுத்தப்படும்.

PAPERMASTER.LK

மொத்த உள்நாட்டு உற்பத்தி விலைச்சுருக்கத்தைக் கணிப்பிட மிகவும் பொருத்தமான விலைச்சுட்டெண்ணை வழங்கல் (ஏதாவது இரு காரணிகளுக்கு 2 புள்ளிகள்)

7. (i) சமூக நன்மைக்காக வினைத்திறனுடன் வளங்களைப் பங்கீடு செய்வதற்குச் சந்தைக் கருவிக்கு முடியாமல் போதல். சந்தைத் தோல்வி எனலாம். (01 புள்ளி)

சந்தைத் தோல்வி எனப்படுவதற்கான காரணிகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- ★ பொதுப்பண்டங்களை வழங்காமை.
- ★ வெளிவாரிகள் ஏற்படல்
- ★ பூரணமற்ற தகவல்கள்
- ★ பூரணமற்ற போட்டி
- ★ பொதுச் சொத்துக்களின் மிகை பாவனை
- ★ காரணி அசைவின்மை
- ★ நியாயமான வருமானப் பரம்பல் இன்மை (ஏதாவது மூன்று காரணிகளுக்கு 3 புள்ளிகள்)

(ii) • உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவு காணப்படும்போது

நுகர்வில் எதிர்கணி வெளிவாரி விளைவு காணப்படும்போது

உற்பத்திச் செயற்பாட்டில் வெளிச் செலவுகள் காணப்படும்போது அவ் வெளிச்செலவுகள் உற்பத்தியில் தனியார் செலவுடன் சேர்த்த பின் எல்லைச் சமூகச் செலவு எல்லைத் தனியார் செலவை மீறிச் செல்லும். இதனால் சந்தையில் உற்பத்தி செய்யும் அளவு சமூகம் தொடர்பாக உச்ச வெளியீட்டு மட்டத்தைத் தாண்டிச் செல்லும். (02 புள்ளிகள்)





(02 புள்ளிகள்)

(iii) சட்டரீதியாக வரிசெலுத்த வேண்டிய நபர் வரி செலுத்தும் சந்தர்ப்பத்தில் தாங்கும் வரிச்சுமை சட்டரீதியான வரிச்சுமை எனப்படும்.

உதாரணம் : சிகரட் உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படும் சிகரட் ஒன்றிற்கு ரூ. 20 வரி செலுத்தும் நிலையில் உற்பத்தியாளரின் பண வருமானத்தில் ஏற்படும் தற்காலிக செல்வாக்காகும்.

வரியை நகர்த்தல் செயற்பாட்டில் வரி செலுத்துவோரின் மெய் வருமானத்தில் ஏற்படும் செல்வாக்கு பொருளியல் வரிச்சுமை எனப்படும்.

மேற்கூறப்பட்ட உதாரணத்தின் படி சிகரட்டின்மீது ரூ. 20 வரி அறவிடப்பட்டால் சிகரட்டின் விலை ரூ. 12 ஆல் அதிகரித்தால் உற்பத்தியாளரின் மெய்வருமானத்தில் உண்மையில் ஏற்படும் செல்வாக்கு ரூ.8 ஆகும். இது உண்யையான வரிச்சுமை எனக்கருதலாம்.

சட்டரீதியான வரிச்சுமைக்கும் பொருளாதார வரிச்சுமைக்கும் இடையிலான வேறுபாடு வரியை நகர்த்துவதிலேயே தங்கியுள்ளது. வரியை நகர்த்தக் கூடிய ஆற்றல் பண்டத்தின் கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சியிலேயே தங்கியுள்ளது.

PAPERMASTER.LK

(04 புள்ளிகள்)

(iv) அரச வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக

1978	2013	2014	2015
27.4	14.5	11.4	13

(02 புள்ளிகள்)

கடந்த நான்கு தசாப்தங்களில் இலங்கையின் அரச வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக கவனிக்கத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் அரச வருமானம் வீழ்ச்சியடைவதற்கு பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

- வரி வருமானம் குறைதல்.
    - தடையற்ற வர்த்தகப் பிரதேசம்
    - அண்மைக்கால வரி மறுசீரமைப்பில் காணப்பட்ட குறைபாடுகள்
    - வரி நிர்வாகம் கஷ்டமாதல். இதனால் வரி கட்டுவதிலிருந்து தப்பியோர் தொகை அதிகரித்தல்.
    - 2002 இல் வற் வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின் பல்வேறு பண்டங்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகை 500 இற்கு மேலாகும்.
    - வருமான வரியும் கம்பனி வரியும் தொடர்பாக 40 இற்கு மேற்பட்ட பல்வேறு சலுகைகள் உண்டு. அதற்கு மேலதிகமாக BOI முதலீட்டாளர்களுக்கு மேலதிக வரிச்சலுகை வழங்கப்பட்டமை.
    - இணையத்தளத்தின் மூலம் பண்டங்கள் கொள்வனவு செய்தல்.
    - வரி முறையில் காணப்படும் சிக்கல் தன்மைகள்
- அரச முயற்சிகளின் வருமானம் வீழ்ச்சியடைதல்.

(02 புள்ளிகள்)

(v) (அ) அரச மொத்த வருவாயில் இருந்து (வரி மற்றும் வரி அல்லா) நடைமுறைச் செலவைக் கழித்தபின் பெறும் பெறுமதி நடைமுறைக்கணக்கு நிலுவை எனப்படும். (01 புள்ளி)

(ஆ) அரச வருமானம் மற்றும் நன்கொடைகளில் இருந்து அரச கடனுக்கான வட்டி தவிர்ந்த ஏனைய அரச செலவுகளை கழித்தபின் பெறப்படும் பெறுமதி ஆரம்பக் கணக்கு மீதி எனப்படும். (01 புள்ளி)

(இ) அரச வருமானம் மற்றும் நன்கொடையிலிருந்து அரச கடன் மீள் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய அரச செலவுகளை கழித்தபின் வரும் பெறுமதி தேறிய மூலதனப் பற்றாக்குறை என்பபடும் (01 புள்ளி)

(ஈ) குறிப்பிட்ட ஒரு அமைச்சுக்கு பாதீட்டின் மூலம் ஒதுக்கிய நிதி பாதீட்டு வருட முடிவுக்கு முன் செலவு செய்து முடிந்துவிட்டால் மீதி குறுகிய காலத்துக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் மூலம் பாராளுமான்றித்தில் சமர்பிக்கப்படும் செலவு மதிப்பீடு குறைநிரப்புப் பிரேரணை எனப்படும்.

8. (i)
- உற்பத்திக் காரணிகள் உரிமையின் இயல்பு
- உற்பத்தி நுட்ப முறைகள் (தொழில் நுட்பம்)
- சர்வதேச சிறப்புத் தேர்ச்சி
- குறிப்பிட்ட உற்பத்தித் தொழிற்பாட்டில் அளவுத்திட்ட விளைவு
- நாட்டின் பரப்பளவும் அமைவும்
- தொழிலின் ஆரம்ப நிலை
- அரச கொள்கை
- சந்தையின் போட்டித் தன்மை
- உற்பத்தித் தொழிற்பாட்டில் பண்டங்களை வகைப்படுத்தல்.
- உற்பத்தி விருப்பம் (ஏதாவது நான்கு காரணிகளுக்கு 04 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(ii) இக்கூற்றிற்கு இனங்கலாம்.

இலங்கையின் ஏற்றுமதிப் போக்கு ஐரோப்பிய நாடுகளினதும் அமெரிக்க நாடுகளினதும் பக்கம் திசைமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உ-ம் : 2015 ஆம் ஆண்டு இலங்கையின் ஏற்றுமதிப் போக்குத் திசை பின்வருமாறு

நாடுகள்	மொத்த ஏற்றுமதிப் பங்களிப்பு (%)
ஐக்கிய அமெரிக்க நாடு	27
ஐக்கிய இராச்சியம்	11
ஐரோப்பிய சங்கம்	12

அதே போல் இலங்கையின் இறக்குமதிப் போக்கு ஆகிய நாடுகளின் பக்கம் திசைமுகப்படுத்தபப்பட்டது.

உ-ம் : 2015 ஆம் ஆண்டு இலங்கையின் இறக்குமதிப் போக்குகளின் திசை பின்வருமாறு

நாடுகள்	மொத்த ஏற்றுமதிப் பங்களிப்பு (%)
இந்தியா	23
சீனா	20
சிங்கப்பூர	6
யப்பான்	7

(02 புள்ளிகள்)

(iii) (அ) வர்த்தக நிலுவை = ஏற்றுமதி - இறக்குமதி

= 1200 - 1800

= -600 (01 புள்ளி)

(ஆ) சேவைக் கணக்கு = காப்புறுதி (தேறியது) + சுற்றுலா (தேறியது) + போக்குவரத்து + நிதிச் சேவை (தேறியது)

= (30 - 20) + (60 - 10) + (140 - 120) + (25 - 15)

= 10 + 50 + 20 + 10

= 90 (01 புள்ளி)

(இ) ஆரம்பக் வருமானக் கணக்கு நிலுவை = தேறிய வட்டியும் இலாபமும் + ஊழியர் சம்பளம் (தேறியது)

= (5 - 25) + (7 - 12)

= (- 20) + (-5)

= - 25 (01 புள்ளி)

(ஈ) இடைநிலை வருமானக் கணக்கு நிலுவை = ஊழியர் நகர்வு தேறியது

= 300 - 80

= 220 (01 புள்ளி)

(iv) முகாமை செய்யப்பட்ட பெயரளவு நாணய மற்றுவீதம் அல்லது மிதக்கும் நாணய மாற்றுவீதம் என்பது நிலையான நாணய மாற்றுவீதம் மற்றும் மிதக்கும் நாணய மாற்றுவீதம் ஆகிய இரு முறைகளிலும் உள்ள சிறந்த இயல்புகளின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள எடுக்கப்பட்ட அவ்விருமுறைகளின் கலப்பாகும்.

இங்கு நாணய அதிகாரியால் உள்நாட்டு நாணய அலகு ஒன்றுக்கு நிலையான நாணய மாற்றுவீதம் ஒன்றைத் தீர்மானித்து அதை குறிப்பிட்ட ஒரு பரம்பலில் தளம்ப விடப்படும்.

பரப்பைத் தாண்டி நாணய மாற்று வீதம் மாற்றம் அடையும் நிலையில் நாணய மாற்றுவீதத்தின் தேய்வையும் பெறுமதி அதிகரிப்பையும் தடுப்பதற்கு மத்திய வங்கியால் சர்வதேச நாணயச் சந்தையில் உள்நாட்டு நாணய விற்பனவு கொள்வனவு செய்வதன் மூலம் நாணய மாற்றுவீதத்தின் தளம்பல் கட்டுப்படுத்தப்படும்.

PAPERMASTER.LK

இம்முறையின் கீழ் சந்தை சக்திகள் மூலம் நாணய மாற்று வீதம் சுதந்திரமாக தீர்மானிக்க இடமளிக்காது,

நாணய மாற்றுவீதத்தில் தளம்பலைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி சர்வதேச நாணய சந்தையில் தலையீட்டை மேற்கொள்வதால் அது சுத்தந்திரமான மிதக்க விடல் அல்லாது அசுத்தமான மிதக்கவிடல் என அறிமுகப்படுத்தப்படும்.

மிதக்கும் நாணய மாற்றுவீதத்தின் கீழ் குறுங்காலத்தில் நாணய மாற்றுவீததின் தளம்பலைக் கட்டுப்படுத்த நாணயச் சந்தையில் தலையிடுவதுடன் நீண்டகாலத்தில் சந்தைசக்திகள்மூலம் நாணய மாற்றுவீதத்தைத் தீர்மானிக்க இடமளிக்கப்படும். (04 புள்ளிகள்)

(v) பாதுகாப்பு வாதம் என்றால் உள்நாட்டு இடைநிலை கைத்தொழில்களை வெளிநாட்டுப் போட்டி உற்பத்தியாளர்களிடம் இருந்து பாதுகாப்பதாகும். பாதுகாப்பு வாதத்துக்கு எதிராக உலகில் வர்த்தக ஒழுங்கமைப்பு உருவாகியுள்ளது. அவற்றின் மூலம் நாடுகளால் சுங்கவரி சுங்கவரி அல்லா வர்த்தகத் தடைகள் மேற்கொள்வதற்கு தடைவிதிப்பதன் மூலம் உலக வர்த்தகத்தை மேலும் விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்கு உலக வர்த்தக அமைப்புக்கள் பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்றியுள்ளது. (02 புள்ளிகள்)

- வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல்
- ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தலும் அவற்றின் மேற்பார்வையும்
- வர்த்தக சர்ச்சைகளை நீக்கல்
- அங்கத்துவ நாடுகளுக்கிடையே வர்த்தகக் கொள்ளளவை விருத்தி செய்தல்.
- சமூகத்தை அறிவுறுத்தல்.
- நாடுகளுக்கு தொழினுட்ப உதவி வழங்கல் (ஏதாவது இரண்டு காரணிகளுக்கு 02 புள்ளிகள்)

9 (i) உயர் பொருளாதார வளர்ச்சி வேகத்தை எதிர்பார்க்கும் பொருளாதாரமொன்றில் பின்வரும் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

- பேரினப் பொருளாதார உறுதியைப் பேணல்.
- பொருளாதாரத்தில் சேமிப்பையும் முதலீட்டையும் உயர்மட்டத்தில் பேண வேண்டும்.
- வட்டி வீதத்தை குறைந்த மட்டத்தில் பேணல்.
- வரிவீதத்தை இலகுபடுத்தல்.
- வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்.
- வளங்களை அதிகரித்தல்
- தொழினுட்பத்தை விருத்தி செய்தல்.
- மானிடத் திறனை விருத்தி செய்தல்.
- நல்லாட்சி

(ஏதேனும் 04 காரணிகளுக்கு 04 புள்ளிகள்)

(ii) பொருளாதார வளர்ச்சியின் அனுகூலங்கள்.

- உயர்மட்ட வாழ்க்கைத்தரத்தைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- வேலை வாய்ப்பு வீதம் அதிகரித்தல்.
- அரச நிதியில் சாதகமான தன்மை ஏற்படல்.
- வர்த்தகத்துறையில் நம்பிக்கைத் தன்மை விருத்தியடையும்.
- மக்களுக்கு முன்பைவிட வாய்ப்புக்கள் கூடும்.

(ஏதேனும் 02 காரணிகளுக்கு 02 புள்ளிகள்)

பொருளாதார வளர்ச்சியின் செலவு

- சூழல் பிரச்சினை.
- பணவீக்க நிலை ஏற்படும்.
- வருமானப் பரம்பல் சமனின்மை ஏற்படும்.
- நிகழ்கால நுகர்வுமட்டம் வீழ்ச்சியடைதல்.

(ஏதேனும் 02 காரணிகளுக்கு 02 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(iii) அபிவிருத்தி என்பது பல்பரிமாணத் செயற்பாடாகும். வருமானம் உயர்வடைதல், வாழ்க்கைத்தர உயர்வு, உயர்மட்ட சுகாதார போசனை நிலைமை, செழிப்பான கலாசார வாழ்க்கை, தனிநபர் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் போன்ற தேவைகள் பூர்த்தியடைதல் அபிவிருத்தியாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதை மட்டும் அபிவிருத்தியாகக் கொள்ளமுடியாது என்பது இதன்மூலம் காட்டப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட நிலமைகளை அடைவதற்கு அவசியமான உயர்வருமானத்தை அடைந்துகொள்ள வேண்டும். அவ்வாறான வருமான மட்டத்தை உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினால் தான் அடைந்துகொள்ள முடியும். பொருளாதார வளர்ச்சியுடன் வேலைவாய்ப்பில் அதிகரிப்பும் வருமான மட்டம் அதிகரிப்பும் ஏற்படும். எனவே அபிவிருத்திக்குப் பொருளாதார வளர்ச்சி என்பது முன் நிபந்தனையாகும்.

(iv) சமூகவியல் மாறுநிலைப் போக்கில் தெட்டத்தெளிவாகக் காணப்படும் இயல்புகளை மூன்று காரணிகளின் உதவியுடன் விளக்கலாம்.

- மிகவும் உயர்ந்த பிறப்பு வீதம், மொத்த இறப்பு வீதம் அதற்குச் சமமான தாழ்ந்த சனத்தொகை வளர்ச்சி வேகம் போன்ற சாதகமற்ற நிலையிலிருந்து மிகவும் தாழந்த இறப்பு வீதம், பிறப்புவீதம் தாழ்ந்த சனத்தொகை வளர்ச்சி வேகம் என்ற சாதகமான நிலைக்கு மாறல்.
- சனத்தொகையின் வயதுக்கடடமைப்பு கூம்பக வடிவிலிருந்து உருளை வடிவுக்கு மாறுதல்.
- மிகவும் உயர்ந்த தங்கிவாழ்வோர் நிலையில் இருந்து சாதாரண தங்கிவாழ்வோர் நிலைக்கு மாறுதல்.

(02 புள்ளிகள்)

அதன் விளைவுகளாக பின்வருவனவற்றை முன்வைக்கலாம்.

- சனத்தொகை உபகாரத் தொகை/ நன்கொடை சாதகமான நிலையொன்று உருவாகியுள்ளதுடன் வேலைசெய்யும் வயதெல்லை 60 வயதாகக் கொண்டல். அது 2017 வரை நிலவும்.
- அதன் சாதகத்தன்மைகள்
  - குடித்தனச் சேமிப்பு வலுப்பெறும்.
  - சமூக நலச் செலவுகள் குறைவடைவதால் அரச நிதிதொடர்பான பிரச்சினைகள் ஒரு வகையில தீர்வாக அமையும்.
  - தனியார் மற்றும் அரச சேமிப்பை முதலீடுகளில் ஈடுபடுத்தலாம்.
  - பொருளாதார வளர்ச்சி எதிர்பார்ப்பு உயர்வடையும்.

- எனினும் இச்சாதகத்தன்மை குறிப்பிட்ட கால எல்லை முடிவடைந்ததன் பின் தங்கி வாழும் முதியோர் வீதம் அதிகரிப்பதால் வேலைசெய்யும் வயதிலுள்ள சனத்தொகை குறைவடைதல், சமூக நலச் செலவுகள் அதிகரித்தல். முதியோருக்கு பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகளான நிலைமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படலாம்.

- பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு ஆண்களின் ஆயுள் எதிர்பார்ப்பை மிஞ்சிச் செல்வதால் வயது முதிர்ந்த பெண்களின் தொகை அதிகரிப்பதால் அவர்கள் பாதுகாப்பற்ற நிலை என்பன ஏற்படலாம்.

(v) கடந்த மூன்று பத்தாண்டுகளில் இலங்கையில் மொத்த வறுமை மட்டம் வீழ்ச்சியடைந்து காட்டுவதுடன் பிரதேச ரீதியாகவும் துறைரீதியாகவும் வறுமையில் இன்னும் வேறுபாடு காணப்படுகின்றது.

உதாரணம் : சனத்தொகை வறுமைச்சுட்டெண் மாற்றமடைந்த முறை.

துறை	1995/96	2002	2006/7	2009/10	2012/13
இலங்கை	28.8	22.7	15.2	8.9	6.7
நகரம்	14.0	7.9	6.7	5.3	2.1
கிராமம்	30.9	24.7	15.7	9.4	7.6
பெருந்தோட்டம்	38.4	30.0	32.0	11.4	10.9

PAPERMASTER.LK

மாகாண ரீதியாக எடுத்துக்கொண்டால் குறைந்த வறுமை மட்டமாக 2.0% மேல் மாகாணம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் உயர்ந்த வறுமை மட்டமான 15.4% ஊவா மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டது.

மாவட்ட மட்டத்தில் கவனிக்கும்போது கொழும்பு மாவட்டத்தில் வறுமை 1.4% ஆகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 27.8% ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் இலங்கையின் வருமானப் பரம்பல் சமமின்மை உயர்மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் தீவிரத்தன்மை சிறிதளவு குறைந்துள்ளது,

குடும்பங்களுக்கிடையே வருமானப் பரம்பல்

வருடம்	குறைந்த வருமானம் பெறும் 10% இன் வருமானத்தில் வீதம்	உயர் வருமானம் பெறும் குடும்பங்களின் 10% உரிய வருமான வீதம்	குடும்பங்களின்படி கினிக்குணகம்
2006/7	1.6	40.1	0.49
2009/10	1.6	39.5	0.49
2012/13	1.5	38.0	0.48

கடந்த சில தசாப்தங்களில் இலங்கையின் வறுமை குறைவதற்கு வருமானப் பரம்பலின் சமத்துவமின்மையின் தீவிரத்தன்மை வீழ்ச்சியடைந்துள்ளமை ஒரு காரணமாகக் காணப்பட்டாலும் அரசினால் முன்னெடுக்கப்பட்ட விரிவான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, வறியோர் நிவாரணம், கல்வி மற்றும் சுகாதார போன்ற சமூக நல சேவைகள் என்பன முக்கிய பங்களிப்புச் செய்துள்ளதாகக் காட்டுகின்றது.

10 (i) இலங்கையின் சுற்றுலாத் துறை தொடர்பான எதிர்பார்ப்புக்களை கீழே குறிப்பிட்டவாறு காட்டலாம்.

- இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் தொகை அதிகரித்தல்.
- உயர், தாழ், மத்திய என்ற எல்லா மட்டங்களிலுமுள்ள உல்லாசப் பயணிகளையும் கவர்தல்.
- தனியாள் செலவு உயர் மட்டத்தில் காணப்படும் உள்ளாசப் பயணிகளைக் கவருதல்.

சவால்கள்.

- எதிர்பார்க்கும் உல்லாசப் பயணிகளின் தொகைக்கு ஏற்ப ஹோட்டல் துறைகள் காணப்படாமை.
- பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையும் - ஊழிய நகர்வும்
- உலகப் பிரசித்திபெற்ற ஹோட்டல்கள் இலங்கை பற்றி குறிப்பிட்டளவு கரிசனை கொள்ளாமையும் கொழும்பில் ஹோட்டல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள குறைந்த கட்டணமும்.
- சுற்றுலாத் துறையில் உயர், மத்திய, தாழ்ந்த தர உல்லாசப் பிரயாணிகள் தொடர்பாக உபாயங்களை மேற்கொள்ளல்
- முறையற்ற துறைகளை மாற்றியமைத்தல்.
- பாரிய பரம்பலுடைய சீனாவில் இருந்து வரும் சுற்றுலாப் பிரயாணிகளில் விருத்திக்கு ஏற்ற வகையில் வசதிகளை வழங்கக் கூடிய ஆற்றல்.
- இரவு தங்கியிருக்கும் பயணிகளின் தொகைக்கு ஏற்ப சராசரி காலவரையரையை பலவருடங்களுக்கு அவ்வாறே நடாத்திச் செல்லல்
- புத்தாக்கப் பிரவேசத்தின் அவசியம்

(ii) போதியளவு உட்கட்டமைப்பு வசதியின்மை. - தொழிற்சங்கங்களின் தலையீடு
முறையற்ற மின்சார வழங்கல் - வரிமுறையில் காணப்படும் இடர்பாடுகள்
உறுதியற்ற அரச கொள்கை - கடும் சட்டதிட்டங்கள்.
அரசியல் ஸ்திரமற்ற தன்மை - வெளிநாட்டு நாணயமாற்று அசைவு தொடர்பான வரையறைகள்.

PAPERMASTER.LK

(iii) இலங்கையில் அண்மைக் காலத்தில் பொருளாதார வளர்ச்சியில் உயர்ந்த பங்களிப்புச் செய்த துறைகள் கீழே காட்டபட்டுள்ளது.

	2015 ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பு (வீதத்தில்)
- வர்த்தகம், போக்குவரத்து, தங்குமிட வசதிகள்	23.2%
- உற்பத்திக் கைத்தொழில்	15.7%
- நிதி, காப்புறுதி, வீட்டுரிமையும் சொத்து விற்பனையும்.	12.3%
- தொழில் சேவைகளும் ஏனைய தனிப்பட்ட சேவைகளும்	11.8%

(iv) - சர்வதேச வர்த்தகம் பாரியளவில் வீழ்ச்சிப் போக்கைக் காட்டுகின்றது.
- 2000 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80% பொருட்கள் சேவைகள் வர்த்தகம் 2013 ஆகும் போது 54% வீழ்ச்சியடைந்துள்ளது.
- யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களுக்கு மேலாகக் காணப்பட்டாலும் நேரடி வெளிநாட்டு முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% விடக் குறைவு.
- இலங்கை உலக வர்த்தகத்தில் 1980 இல் காணப்பட்ட விகிதாசாரத்திற்கு குறைந்துள்ளமை
- 2004 இல் ஏற்றுமதிப் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28% மட்டும். அது 2014 ல் 15% குறைந்துள்ளது.
- இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு இன்னும் ஆரம்பநிலையில் காணப்படுகின்றமை.

(v) 2000 வருடத்தில் முன்வைக்கப்பட்ட புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி குறிக்கோள்களின் தொடர்ச்சியாக 2015 ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் நிலைபேறான அபிவிருத்தி குறியீடுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இந் நிலைபேறான அபிவிருத்தியில் 5 பரந்த துறைகள் உள்ளன. அவை,

- மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்தல்.
- பூகோளத்தைப் பாதுகாத்தல்.
- சௌபாக்கியத்தை உருவாக்கல்
- சமாதானத்தை நிலைநாட்டல்.
- உலக பங்குடமையொன்றை ஏற்படுத்தல்.

இப்பரந்த துறைகளை நிறைவேற்றிக் கொள்ள 17 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

உதாரணம் - எல்லா வகையான வறுமையையும் ஒழித்தல்.
- பட்டினியை நீக்கலும் உணவுப் பாதுகாப்பும் நிலைபேறான விவசாய விருத்தியும்.
- அனைவருக்கும் சுகநலமான வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்தல்.

இக்குறிக்கோள்கள் மூலம் அடைய எதிர்பார்க்கும் இலக்குகள் 169 ஆகும். 2030 ஆம் ஆண்டு முடிவடையும்போது இவ்விலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

PAPERMASTER.LK